# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க,
# தரைப்படை
# (திருத்தச்) சட்டம்

---

*(1993, மார்ச் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1993, மார்ச் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு* **வர்த்தமானப் பத்திரிகையின்** பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை : சதம் 45** **தபாற் செலவு : ரூபா 1.00**

1993 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தரைப்படை (திருத்தச்) சட்டம்.

[1993, மார்ச் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 24/91

**தரைப்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தரைப்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" என எடுத்துக் காட்டப்படும்) தரைப்படைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **357 ஆம் அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(அஅ) (i) விதித்துரைக்கப்பட்ட தவறொன்று தொடர்பில் அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட நீதிசார் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளின், முடிவை எதிர்பார்த்து, அவரின் பதவியைப் பிரயோகிப்பதிலிருந்து அவர் எக்காலப்பகுதியின்போது இடைநிறுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் காலப்பகுதி தொடர்பில், எல்லாக் கொடுப்பனவும் படிகளும் அத்துடன்,

(ii) ஏதேனும் வேறு தவறு தொடர்பில் அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட நீதிசார் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளின் முடிவை எதிர்பார்த்து அவரது பதவியைப் பிரயோகிப்பதிலிருந்து அவர் எக்காலப் பகுதியின்போது இடைநிறுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் காலப்பகுதியின் ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அம்மாதத்திற்கான அவரது கொடுப்பனவினதும் படிகளினதும் ஒரு பாகம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :—

"(அஅ) (i) விதித்துரைக்கப்பட்ட ஒரு தவறு தொடர்பில் அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட நீதிசார் அல்

2—ட 024945—1,270 (10/92)

லது ஒழுக்காற்று நடவடிக்கைகளின் முடிவை எதிர் பார்த்து அவரின் கடமைகளிலிருந்து அவர் எக் காலப்பகுதியின் போது இடைநிறுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் எல்லாக் கொடுப்பனவும் படிகளும்; அத்துடன்

(ii) ஏதேனும் வேறு தவறு தொடர்பில் அவருக் கெதிராகத்தொடுக்கப்பட்ட நீதிசார் அல்லது வழக் காற்று நடவடிக்கைகளின் முடிவை எதிர்பார்த்து, அவரது கடமைகளிலிருந்து அவர் எக்காலப் பகுதி யின்போது இடைநிறுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் காலப்பகுதியின் ஒவ்வொரு மாதம் தொடர் பிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அம் மாதத்திற்கான அவரின் கொடுப்பனவினதும் படிகளி னதும் ஒரு பாகம்.".

(2) அவ்வுட்பிரிவின் (1) ஆம் காப்பு வாசகத்தில், "அத்தகைய கழி வின் மொத்தத் தொகையானது" என்னும் சொற்களுக்குப் பதி லாக "இவ்வுட்பிரிவின் (அ), (அஅ), (அஅஅ), (ii), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) அத்துடன் (எ) என்னும் பந்திகளால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய கழிவுகளின் மொத்தத் தொகையானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.